# பாங்கு மற்றும் இகாமத்

**பாங்கு ஏற்பட்ட முறை:**

ஸெய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு ஜைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படும் செய்தியாகும். அச்செய்தி......'கண்மணி ரசூலுல்லாஹ் அவர்கள் மனிதர்களைத் தொழுகைக்கு அழைக்கும் முறையாக தொழுகையின் (நேரம் வந்த போது) மணி அடிக்குமாறு ஏவினார்கள்.

(இந்நிலையில்) நான் தூங்கிக் கொண்டிருக்கும் சமயம் கனவில் ஒரு மனிதர் தனது கையில் ஒரு மணியை வைத்துக் கொண்டு என்னைச் சுற்றிச் சுற்றி வந்தார். நான் அவரிடம் அல்லாஹ்வின் அடிமையே! இந்த மணியை எனக்கு நீர் விற்பனை செய்கிறீரா? எனக் கேட்டேன். அதற்கு அவர் இதனைக் கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? என்று என்னிடம் கேட்க இதனைக் கொண்டு மணி அடித்து தொழுகைக்கு மக்களை அழைப்போம் என்றேன். அதற்கு அவர் இதனை விடச் சிறந்த ஒன்றை நான் உனக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்டார். நானும் சரி என்றேன். அப்போது அவர்....

الله اكبر الله اكبر    الله اكبر الله اكبر

اشهد ان لا اله الا الله    اشهد ان لا اله الا الله

اشهد ان محمدا رسول الله    اشهد ان محمدا رسول الله

حيعل الصلاة    حيعل الصلاة

حيعل الفلاح    حيعل الفلاح

لا اله الا الله    الله اكبر الله اكبر

என்று பாங்கின் இறுதிவரை சொல்லித் தந்து இப்படி நீ சொல்லலாம் என்று கூறி என்னை விட்டும் சற்று பின் சென்றார்.

பின்பு, அவர் என்னைப் பார்த்து நீ தொழுகைக்காக (ஆயத்தமாகி) நின்றுவிட்டால்

الله اكبر    الله اكبر

اشهد ان محمدا رسول الله    اشهد ان لا اله الا الله

حيعل الفلاح    حيعل الصلاة

قد قامت الصلاة    قد قامت الصلاة

لا اله الا الله    الله اكبر الله اكبر

என்று இகாமத்தின் இறுதி வரை சொல்லித்தந்து இப்படி நீ சொல்லலாம் என்றார்.

விடியற்காலைப் பொழுதில் எழுந்த நான் நாயகர் பூமான் அவர்களிடம் வந்து இரவு கண்ட கனவைச் சொன்னேன். அதற்கு அவர்கள் 'அது இறைவனில் நின்றுமுள்ள கனவு தான் ان شاء الله என்று கூறி 'நீர் எழுந்து பிலாலுக்கு அதனை சொல்லிக் கொடும். ஏனெனில் அவர் உம்மை விட உயர்ந்த தொனியை உடயவர் என்றார்கள். நானும் அவ்வாறே எழுந்து பிலாலுக்குச் சொல்லிக் கொடுக்க அவர் அதனைக் கொண்டு பாங்கு சொன்னார்.

**பாங்கு சொல்வது கடமையா?**

اذا حضرت الصلاة فليؤذن احدكم

'தொழுகையின் நேரம் வந்து விட்டால் உங்களில் ஒருவர் பாங்கு சொல்லட்டும்' என்ற ஹதீது வந்திருப்பதால் ஃபர்ளான தொழுகைக்கும் கழாவான தொழுகைக்கும் பாங்கு சொல்வது ஆணுக்கு சுன்னத்.

பெண்கள் சப்தத்தை மிகவும் தாழ்த்தி இகாமத் சொல்வது சுன்னத். பெண்கள், பெண்களுக்கு மட்டும் சொல்வதாக இருந்தால் சப்தத்தைத் தாழ்த்தி மெதுவாக சொல்வதாக இருந்தால் மக்ரூஹ் ஆகாது. பெண்கள் சப்தமாக அதான் சொல்வது ஹராம் ஆகும்.

**பாங்கின் மேன்மை:**

قال الله تعالى : ومن احسن قولا ممن دعا الى الله(فصلت33

அல்லாஹ் கூறுகிறான் ' அல்லாஹ்வின் பால் அழைப்பவர்களை விடவும் சொல்லால் அழகியவர் யார்?

قال النبي صلى الله عليه وسلم من اذّن سبع سنين محتسبا كتب له براءة

من النار

நபிகளார் அவர்கள் கூறியுள்ளார்கள் ' நன்மையை நாடி ஒருவன் 7 வருடங்கள் பாங்கு சொன்னால் அவருக்கு நரகத்தை விட்டும் விடுதலைப்பத்திரம் எழுதப்படுகிறது'

لا يسمع مدي صوت المؤذن جن ولا شيء الا شهد له يوم القيامة(2

www.sufimanzil.org

மறுமை நாளில் முஅத்தினுக்கு சாட்சியாகியே தவிர அவரினுடைய சப்தத்தை ஜின்னோ மனிதனோ செவியுறாது என்றும் கூறியுள்ளார்கள்

**பாங்கு எப்போது சொல்வது சுன்னத்:**

தொழுகைக்காக மட்டுமின்றி இந்த பாங்கை கோபம் கொண்டவன், ஜின் மற்றும் பிசாசு எனும் ஷைத்தானால் பாதிக்கப்பட்டவன் காதில் ஓதி ஊதுவதும், நெருப்புப் பற்றிக் கொண்ட போதும், ஜின், ஸைத்தான் போன்றவை மூரியாட்டம் செய்திடும் நேரத்திலும் பாங்கு சொல்வது சுன்னத்தாகும்.

**பாங்கும் இகாமத்தும் சேர்த்து எப்போது சொல்வது சுன்னத்:**

பாங்கையும், இகாமத்தையும் பிறந்த பிள்ளையின் இரு காதுகளிலும், பயணம் புறப்பட்டுச் செல்பவன் செல்லும் போது அவரைப் போக விட்டு அவருக்குப் பின்பாகவும் சொல்வது சுன்னத்தாகும்.

**2 பாங்குகள் சொல்வது எப்போது சுன்னத்:**

1)**சுப்ஹு தொழுகைக்கு:**

கிழக்கு வெளுக்குமுன் ஒரு பாங்கும் கிழக்கு வெளுத்த பின் ஒரு பாங்கும் ஆக சுப்ஹிற்கு இரண்டு பாங்குகள் சொல்வது சுன்னத்தாகும். ஏதேனும் ஒரு பாங்கு மட்டும் சொல்வதாக இருந்தால் கிழக்கு வெளுத்த பின் சொல்வதே ஏற்றம்.

**2)ஜும்ஆ தொழுகைக்கு:**

ஜும்ஆவிற்கு இரு பாங்குகள் சொல்வது சுன்னத்தாகும். ஓன்று கதீப் மிம்பரில் ஏறிய பின் சொல்லப்படுவது. இது தான் நபிகளாரின் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. மற்ற ஒன்று வக்து வந்த பின் சொல்லப்படுவது அதனை ஸெய்யிதுனா உதுமான் (ரழி) அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

**பாங்கிற்கு பதில் சொல்லும் முறை:**

பாங்கு முஅத்தில் சொல்ல ஆரம்பிக்கும் போது

اشهد ان لا اله الا الله واشهد ان محمدا عبده ورسوله رضين بالله ربا وبالاسلام دينا وبمحمد نبيا ورسولا

என்று கூறுவதாக இருக்கும். பின் முஅத்தின் الله اكبرالله اكبرالله اكبرالله اكبر என்பதனைக் கூறும் போது நாமும் அதைப் போன்றே கூற வேண்டும். பின் முஅத்தின் اشهد ان لا اله الا الله என்று கூறும் முன் நாம் சப்தத்தை மிகவும் தாழ்த்தி

اشهد ان لا اله الا الله     اشهد ان لا اله الا الله

اشهد ان محمدا رسول الله     اشهد ان محمدا رسول الله

என்று கூற வேண்டும். இதற்கு ترجيع (மீட்டிச் சொல்லுதல்) என்று பொருள். அதன் பின் முஅத்தின்

اشهد ان لا اله الا الله  اشهد ان لا اله الا الله

என்று கூறும் போது நாமும் அவ்வாறே கூற வேண்டும். பின் அவர் اشهد ان محمدا رسول الله என்று முதல் தரம் கூறும் போது صلى الله عليك يارسول الله (அல்லாஹ்வின் தூதரே! உங்களின் மீது அல்லாஹ் ஸலவாத் சொல்வானாக!) என்றும், பின் அவர்

اشهدان محمدا رسول الله என்று இரண்டாவது முறை கூறும் போது قرت

عيني بك يا رسول الله (அல்லாஹ்வின் தூதரே! உங்களைக் கொண்டு என் கண் குளிர்ச்சியடைந்து விட்டது) என்றும் மேலும் இவையிரண்டையும் கூறும் போது தன் கையின் இரு பெருவிரல்களையும் சேர்த்து இரு கண்ணின் இமைகளை தடவி முத்தமிடுவதும் சுன்னத்தகும். அதன் பின் முஅத்தின்

حيعل الصلاة    حيعل الصلاة

என இரு முறை கூறும் போதும்

لا حول ولا قوة الا بالله (நன்மையை செய்வதற்கு முயற்சி என்பதும் தீமையை விடுவதற்கு சக்தி என்பதும் அல்லாஹ்வைக் கொண்டே தவிர இல்லை) என்று 2 முறை கூறுவதும் பின் முஅத்தின்

حيعل الفلاح    حيعل الفلاح

என முஅத்தின் 2முறை கூறும் போது ما شاء الله كان وما لم يشاء (அல்லாஹ் நாடியது நடந்து விட்டது அவன் நாடாதது நடக்காது) என்றும் பின் முஅத்தின்

لا اله الا الله    الله اكبر الله اكبر

என்று கூறும் போது அவ்வாறே கூறுவது சுன்னத்தாகும்.

இகாமத்தும் பாங்கைப் போன்று தான் பதில் சொல்ல வேண்டும் ஆனால் قد قامت الصلاة என இகாமத்தில் 2 முறை கூறும் போது

اقامها الله وادامها وجعلني من صالحى اهلها (அல்லாஹ் இந்த தொழுகையை

நிலைநாட்டி நியமமாக்குவானாக! மேலும் இந்த தொழுகை உடைய நல்லவர்களில் என்னை ஆக்குவாயாக!) என்றும் பதில் சொல்வது சுன்னத்தாகும்.

சுப்ஹு பாங்கின் இறுதியில் الصلاة خير من النوم என்று பிரத்யேகமாக சொல்லப்படும். இதற்கு تثويب (குதித்துச் சொல்லுதல்) என்று பெயர்.

அதனை முஅத்தின் சொல்லும் போது صدقت وبررت وبالحق نطقت (நீங்கள் உண்மை உரைத்தீர்கள். நன்மை செய்தர்கள். உண்மையைக் கொண்டு மொழிந்தீர்கள்) என்று பதில் சொல்வதும் சுன்னத்தாகும். இவ்வாறு பதில் சொல்வதற்கு تصديق (உண்மைப்படுத்துதல்) என்று பெயர்.

இவ்வாறு பதில் சொன்னதன் பின்பாக

اللهم رب هذه الدعوة التامة والصلاة القائمة آت سيدنا محمدا ن الوسيلة والفضيلة والدرجة الرفيعة عالية الشريفة وابعثه مقاما محمودن الذي وعدته وارزقنا شفاعته يوم القيامة انك لا تخلف الميعاد

என்று துஆ ஓதினால் மறுமையில் கண்மணி நபிகளாரின் பரிந்துரை அவருக்கு ஹலாலாகிவிடு என அவர்கள் கூறியுள்ளார்கள்.

**பாங்குக்கு பதில் சொல்வது எப்போது மக்ரூஹ்:**

Toilet ல் இருக்கும் போதும் வுளு செய்து கொண்டிருக்கும் போதும் மனைவியுடன் உடலுறவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் பாங்குக்கு பதில் சொல்வது மக்ரூஹ். அந்த செயல்களை முடித்தப்பின் பதில் சொல்லிக் கொள்ளலாம்.